தளராத துணிவோடு களமாடினாய் இன்று
தமிழீழ நினைவோடு படகேறினாய்
அழகான திருமேனி தணல்ஆனதோ
இந்தி அதிகாரம் உனக்கிங்கு எமன் ஆனதோ 2

நீ நடந்த பாதையெங்கும் பூ மலர்ந்தது
தமிழீழம் எங்கும் உந்தனது பேர் கலந்தது
தாயகத்து போர்க்களத்தில் நீ முழங்கினாய்
தம்பி தானையிலே தளபதியாய் நீ விளங்கினாய்

தளராத துணிவோடு களமாடினாய் இன்று
தமிழீழ நினைவோடு படகேறினாய்

அமைதி தேடி வந்த புறா சிறகிழந்தது
கொடும் அரக்கர்களின் அப்பு பட்டு துடிதுடித்தது 2
இமைய நாடு உந்தனுக்கு குழி பறித்தது 2
உன்னை இளந்ததினால் எங்கள் நெஞ்சு பதைபதைக்குது 2

தளராத துணிவோடு களமாடினாய் இன்று
தமிழீழ நினைவோடு படகேறினாய்

சிங்களத்து படைகளோடு போராடினாய்
வந்த இந்தியர்களோடும் அன்று வாதாடினாய் 2
பொங்குகின்ற புலிகளுக்கு வழிகாட்டினாய் 2
இன்று புயல் படுத்த மாதிரியாய் விழி மூடினாய் 2

தளராத துணிவோடு களமாடினாய் இன்று
தமிழீழ நினைவோடு படகேறினாய

பாசத்தோடும் ஈழ மக்கள் நெஞ்சையாழுவாய்
பிரபாகரனின் தம்பியாகி என்றும் வாழுவாய் 2
ஆசையோடு தேசம் காண வந்த வீரனே 2
கிட்டு அண்ணன் என்ற பேர் எடுத்த எங்கள் தேவனே 2

தளராத துணிவோடு களமாடினாய் இன்று
தமிழீழ நினைவோடு படகேறினாய்
அழகான திருமேனி தணல்ஆனதோ
இந்தி அதிகாரம் உனக்கிங்கு எமன் ஆனதோ